RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2242s222712

OPEN ACCESS

# பெண்நிலை நோக்குத் திறனாய்வு அடிப்படையில் ரமணிச்சந்திரனின் "இது ஓர் உதயம்"

ப. சங்கரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, சென்னை-600032, தமிழ்நாடு, இந்தியா

# Ramanichandra's "Ithu Oru Udayam" based on Feminism

P. Shankari [a, *]

[a] Department of Tamil, Chellammal Women's College, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: shankaritpselvam2001@gmail.com

Received: 18-09-2022
Revised: 06-11-2022
Accepted: 12-11-2022
Published: 05-12-2022

Check for updates

**ABSTRACT**

Literature is the mirror of a society. According to this through ancient works we define the condition of the society at different era. Earlier matriarchal society was superior and women were given importance and later on situation changed and patriarchal society was given importance. In patriarchal society women were lost her opinion, freedom and was forced to live as a slave. To recover from this situation, feminist movements emerged and one of its sections is critical analysis of women's condition. Ramanichandran, who understood the pleasures and pains of women, intends to bring about change through his work. Ithu Oru Udhayam begins with a woman who is enslaved to love at the end become a revolutionary woman who raise voice against her rights.

**Keywords:** Ithu Oru Udhayam, Ramanichandran, Women, Society, Enslave

## முன்னுரை

இலக்கியம் என்பது ஓர் காலக்கண்ணாடி என்பர். இதற்கிணங்கவே பழங்கால நூற்கருத்துக்களைக் கொண்டு சமூகத்தின் நிலைமையினை வரையறுக்கிறோம். பெண்ணின் இன்ப துன்பங்களை நன்குணர்ந்த ரமணிச்சந்திரன் தம் படைப்பின் மூலம் மாற்றத்தினை விளைவிக்க எண்ணுகிறார். கதையின் தொடக்கத்தில் சொந்தங்களின் பாசத்திற்கும் வெறுப்பிற்கும் அடிமைபட்டு திகழும் பெண்ணில் தொடங்கி இறுதியில் புரட்சி பெண்ணாகவும் புதுமை பெண்ணாகவும் படைக்கப்பட்டுள்ளது இதை பற்றி இனிகாண்போம்.

## பெண்நிலை நோக்குத் திறனாய்வு

"கைனோ கிரிட்டிசிசம்" என்ற இந்தப் புதிய சொற்கூட்டை உருவாக்கிய அமெரிக்கரான எலைன் ஷோவால்டர் கீழ்க்கண்டவாறு இதை வரையறுக்க முயல்கிறார்.

1. பெண் எழுத்தாளர்களின் இலக்கியங்களைப் பகுத்தாராயப் பெண்கள் சார்ந்த வேலைத் திட்டத்தை உருவாக்குவது
2. ஆண்களின் இலக்கியக் கொள்கைகளையும் மாதிரிகளையும் தனதாக்கிக் கொள்வதைவிட பெண்களின் அனுபவங்களை ஆராய்வதன் மூலமாகப் பெண்களுக்கே உரிய புதிய மாதிரிகளை வடிவமைப்பது.

3. உண்மையில் பெண்நிலைத் திறனாய்வு எந்தப் புள்ளியில் தொடங்குகிறது என்றால் நேர்கோடு போன்ற முழுமையான ஆண்களின் இலக்கியக் கொள்கைகளில் இருந்து பெண்கள் விடுதலை செய்து கொள்ளும் போதும் ஆண்களின் நேர்கோட்டு மரபுகளுக்கிடையில் போய்ப் பொருந்திக் கொள்ளப் பெண்கள் முயலுவதை அறவே நிறுத்திக்கொண்டு புதிதாகத் தெளிவாய்த் தெரிகிற பெண்களுக்கேயான பண்பாட்டை மையப்படுத்தி அதை வெளிக்கொணரும் போதுதான்.
4. பெண் எழுத்துக்களைப் பற்றிப் பெண்கள் மட்டுமே திறனாய்வு செய்ய வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறது.
5. ஆண்களின் திறனாய்வுக் கொள்கை எனும் "ஆகமங்களால்" மதிப்பிழக்குமாறு செய்யப்பட்டுள்ள பெண் எழுத்துக்களைக் கண்டெடுத்து மீட்டெடுப்பதில் பெரிதும் கவனம் கொள்ளுகிறது.
6. பெண்நிலைத் திறனாய்வு என்பது பெண் எழுத்துக்களின் வரலாறு நடை கரு வகை அமைப்பு விரைவியக்கம் சார்ந்த பெண்ணின் படைப்பு உளவியல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்கியது என்று க.பஞ்சாங்கம் இத்திறனாய்வினை பற்றி விளக்குகிறார் (Panchangam, 1999).

## பெண்மொழி

பெண்களை அடிமைபடுத்திய அமைப்புகளுள்

1. தந்தை வழிச் சமுதாய அமைப்பில் பெண் பற்றிய வரையறைகள்
2. மொழி

என்ற இரண்டு அமைப்புக்களும் குறிப்பிடத்தக்கன (Sarathambal, 2005).

தந்தை வழிச்சமுதாயத்தில் பெண்களுக்கு இயற்கையாக அமைந்த உடலியல் கூறுகளைக் காரணம் காட்டி பெண் தாய்மை அடைவதற்குரியவள் அவளின் இன்றியமையாப் பண்பு கணவனுக்குகந்தவளாக நடப்பது அவனுக்குரிய தேவைகளை மனமுவந்து செய்வதினால் பாராட்டுதற்குரியவள் என்று ஆணை முதன்மைப்படுத்திப் பெண்ணை இரண்டாந்தர நிலையில் சமுதாயம் வைத்தது.

"அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்

பெண்பிறந்தோர்க்குப் பொறையே பெருமை"

"பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாது இருத்தல்" (Athiveera Rama Pandiyar, 2022)

"கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்

உட்குடையாள் ஊர்நாண் இயல்பினாள் உட்கி

இடனறிந்து ஊடிஇனிதின் உணரும்

மடமொழி மாதராள் பெண்" (Ramasubramaniam, 2000)

என இவ்வாறு பெண்ணின் மொழி ஒடுக்கப்பட்டு வந்துள்ளவை தெள்ளிதின் புலப்படுகிறது. ஆகவே இவ்விரண்டு அமைப்புகள் மூலம் பெண்தான் கருதியவற்றை செய்ய இயலாததொரு சூழலுக்கு தள்ளப்பட்டாள். இம்மரபினை மாற்றியமைக்கவே பெண்ணியம் சார்ந்த இயக்கங்கள் மேலைநாடுகளில் தோற்றம் பெற்று உலகெங்கிலும் பரவின.

## சமூக உளவியல்

சமூக உளவியல் சமூக நடத்தையின் தன்மையை நிருணயிக்க முயல்கிறது.

- ஒரு தனியன் மற்றொரு தனியனைச் சந்திக்கும் போது சமூகஎதிர்வினை ஏற்படுகின்றது. பின் தானும் அவர்களால் பாதிக்கப்படுகின்றான்.
- ஒரு தனியன் குழுவிற்கேற்ப எதிர்வினையளிக்கலாம்.

- ஒரு தனியன் ஒருகுழுவைச் சந்திக்கும் பொழுது அவன் நடத்தைப் பாதிக்கப்படுகிறது.
- இதற்கு இணையாக ஒரு தனியனுக்குப்பலர் சேர்ந்து எதிர்வினையளிப்பதையும் காணலாம்.

இவ்வாறாக ஒரு தனியன் தன் சக மனிதர்களிடம் கொண்டுள்ள உறவினை ஆய்வு செய்கின்றது (Sarathambal, 2005).

இக்கதையின் முக்கியமானதொரு திருப்பம் சமூக உளவியல் தான். தன்னை பற்றி மட்டுமே சிந்தித்து கொண்டிருந்த அனுபமா முதல் முறையாக சுதாகரை சுருதியின் வீட்டில் பார்க்கிறாள். அவனுடைய வரவால் துன்பம் நிறைந்த தன் வாழ்க்கையை இன்பமாக மாற்றிக்கொள்ள விழைகின்றாள்.

## இது ஓர் உதயம் - பெண்ணின் படைப்பு

"உரைநடையில் அமைந்த புனைகதை அல்லது ஆண் பெண்களாகிய மாந்தர்களின் வாழ்க்கையின் உணர்ச்சி நிறைந்த நிகழ்ச்சிகளை சித்தரித்துக் காட்டுவது" என்று சேம்பர்சு அகராதி புதினத்திற்கு பொருள் கூறுகிறது. இவ்விளக்கத்திற்கு ஏற்ப அனுபமா என்னும் பெண்ணின் வாழ்க்கையில் நடந்தேறும் சிக்கல்களை பற்றியும் தன் துணையோடு அதை கடந்துவரும் நிகழ்வினை பற்றியும் சித்தரிக்கிறது. இப்புதினத்தின் தொடக்கம் முதல் இறுதி வரையிலும் பெண்ணியம் சார்ந்த கருத்துக்களின் தாக்கம் அதிகம் காணப்படுகிறது.

"அன்றாடம் வழக்கம் போலவே அன்றும் அதிகாலையில்

துயில்களைந்து கண்ணைத் திறவாமல்"

இவ்வரிகள் தொடக்கத்தில் அமைந்து பல எழுச்சிகரமான எண்ணங்களை ஏற்படுத்துகிறது. முதலில் அனுபமா என்ற பெண்ணின் நாளின் தொடக்கத்தினை பற்றி கூறுகிறது. இரண்டாவதாக பெண்ணினத்தின் எழுச்சிக் குரல்களாக அமைகின்றது. எப்பொழுதும் போன்றே நம்முடைய வாழ்க்கை இருளிலேயே அடைப்பட்டுள்ளது. நம்மை சுற்றி நடக்கும் பெண்ணின கொடுமைகளையும் ஒடுக்குமுறைகளையும் கண்டு துயில் களைந்தும் எந்தவொரு மாற்றத்தினை விளைவிக்காமல் அன்றாடம் வழக்கம் போலவே இறங்குகின்றோம்.

"காலையில் எழுந்து மீண்டும் கண்மூடும் வரை எத்தனை பயங்கள்"

கண்விழித்து கண்மூடும் வரையிலும் சமூகத்தில் சந்திக்கும் பலவகையான நிகழ்வுகளும் அதனால் தோன்றும் பயங்களும் பலவீனப்படுத்தாமல் வாழ்க்கையினை எதிர்நோக்கி பலமாக அடுத்தகட்டத்தினை அடைய வழிவகை செய்கிறது (Ramanichandran, 2012).

"எப்படியோ சிரமப்பட்டு பெரிய பத்திலே ஒரு அஞ்சு கொணாந்து கொடுத்துடு மறுநாளே ஜாம் ஜாமுன்னு பெரியவளைத் தலைமுடியப்பிடிச்சு இழுத்துக்கிட்டுப் போ!"

பேராசை கொண்ட சித்தியிடம் இருந்து தவிக்கும் அனுபமாவின் நிலைமை மட்டும் அல்ல. இச்சமூகத்தில் நமக்கான உரிமையினை தேடிப் பெறாதவரையில் நமக்கும் இந்நிலையே. வாழ்க்கையினுடைய ஏற்றத் தாழ்வுகளை எண்ணி சோர்ந்து விடாமல் எண்ணியவற்றை வெற்றிகரமாக முடித்தாக வேண்டும். அப்பொழுதுதான் சுயமரியாதை கிட்டும்.

"எல்லாம் மஞ்சக்கயிறு ஏறும் வரைக்குந்தான்"

மரபு சடங்கு என்ற எல்லாம் பெண்களுக்கு மட்டும் தானா?

இதே மரபும் சடங்கும் ஆண்களுக்கு இல்லையா?

இந்நிலைக்கு காரணம் யார்?

"அன்று சித்தி ஏவிய ஏதோ சற்று அருவருப்பான

வேலையை அனுபமா செய்ய மறுத்த போதுதான்

கரண்டியை காய வைத்து தொடையில் .....

அன்று தான் அனுபமாவின் முதுகெலும்பு முதல்தடவையாக முறிந்த்து

கதறிய மகளின் முகத்தை காணசகியாமல் மனைவியை எதிர்க்கும் துணிவும்

இல்லாமல்கண்ணைப் பொத்திக் கொண்டு தந்தை படுக்கை அறையின்

உள்ளே சென்று பதுங்கிய போது இரண்டாவது தடவை

எரியும் புண்ணோடு சாமான் அறையில் இருளில் எலிகளோடு

இரவு முழுவதும் அடைப்பட்டுக் கிடந்த போது மூன்றாவது தடவை

முழுமையாக முதுகெலும்பு இழந்து போனாள் சிறுமி"

இதன் மூலம் பெண்ணின் சுதந்திரத்தினை பறிப்பவள் பெண் தான் என்பதை மறைமுகமாக தெரிவிக்கிறார். பெண் குழந்தையாக வளரும் போதே பழமை என்னும் பாசக்கயிற்றை அவர்கள் மீது எறிந்து விடுகின்றனர். நாளாக ஆக அது சிறிது சிறிதாக அவள் விடுதலையை அவளிடமிருந்து பறித்து விடுகின்றது (Ramanichandran, 2012).

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப" (தொல் களவியல் 96)

அச்சம்: "திகைத்த விழிகள் கூர்மைபெற அவளையே நோக்கின". நாணம்: "பொதுப்படையான ஒரு "வருகிறேன்" உடன் வேகமாய் வெளியேறி விட்டாள் அனுபமா". மடன்: "மறுநாள் காலை எழுகையிலே அந்த சுதாகரன் இன்று அங்கே இருப்பானோ மாட்டானோ என்று ஒரே யோசனை", "எனக்குச் சுதாகரை மணக்கத்தான் பிரியம் சார்", "சித்தியை உதறியது… கண்ணபிரானிடம் சீறியது. பாலகிருஷ்ணனை ஏவியதை நினைக்கையில் கூட அவளுக்கே வியப்பாகத்தான் இருந்தது." மேற்கண்டவற்றில் அனுபமா தன்னை புதுமை பெண்ணாக வெளிப்படுத்துகிறாள்.

"ஓகே!" என்று எழுந்தார் இன்ஸ்பெக்டர் பழைய வாழ்வை விடியலின் முன்னுள்ள இருட்டாய் ஒதுக்குங்கள் இனிவரும் வாழ்வு ஓர் இனிய உதயமாக இருக்கட்டும் என்று வாழ்த்தினார்" இவ்வாறாக பெண்ணின் இருளில் (பெண் அடிமைத்தனத்தில்) தொடங்கி பெண்ணின் உதயத்தில் (பெண் விடுதலையில்) முடித்துள்ளார்.

## முடிவுரை

காலத்திற்கு ஏற்ப பழைய கருத்தாக்கங்கள் மாற்றம் பெற்று புதியதொரு வடிவில் உரு பெறுகிறது. இனிவரும் பெண்ணினத்திற்கு சமஉரிமையினையும் கருத்து சுதந்திரத்தினையும் பெற்று தருவோம். மரபினை தகர்த்து மாற்றத்தினை கட்டமைக்கும் வகையில் செயல்படுவோம்.

## References


Athiveera Rama Pandiyar, (2022) Vettriverkai, Notion Press, Chennai, India.

Panchangam, K. (1999) Pen Moli Punaivu, Kaviya Pathippagam, Chennai, India

Ramanichandran, (2012) Ithu Oru Udayam, Arunothyam, Chennai, India

Ramasubramaniam, V.T. (2000) Naladiyar Moolamum Uraiyum, Thirumagal Nilayam, Chennai, India.

Sarathambal, S. (2005) Penniya Ulappakuppaivum Pen Eluthum, International Institute of Tamil Studies, Chennai, India


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License